முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1077

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.09.2022, சனிக்கிழமை

1. அறமெனும் சக்திகொண்ட அரங்கா வாழ்க
அன்னதான வள்ளலே தேசிகா வாழ்க
வரம்தந்து கலியுக மக்களை
வாழவைக்க வந்த வள்ளலே ஞானியே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 25 நாள், 10.09.2022 சனிக்கிழமை)
ஊழ்போக்கும் மகா சக்தி நீயப்பா
உலகை மாற்றும் யோகியும் நீதானப்பா
3. அப்பனே அரங்கனே உந்தன் உள்ளே
ஆறுமுகன் இருப்பது உண்மையப்பா
ஒப்புகொண்டு உன்பதம் பற்றிவிட்டால்
உலகோர்க்கு ஜீவமுக்தி உறுதியப்பா
4. உறுதிதந்தேன் அரங்கன் உன் சக்திக்குள்ளே
உயர்வான ஆறுமுகன் என் சக்திதானும்
தயவாக கலந்து உலக மக்களுக்கு
தவதர்மபலம் தன்னை அருளிவர
5. வருகின்ற உன்வழி மக்களெல்லாம்
வரமாக உன் சித்திவழியே
வழிதனில் ஞானி ஆவரப்பா
வையகத்தில் உன்னை ஐயம் கொண்டு
6. தயவில்லா அணுகுகின்ற மக்களுக்கு
தரணியில் நிந்தனை மிகுதியாகும்
ஆகவே உன்வழி சரணடைந்தால்
அவரெல்லாம் ஆறுமுகன் எந்தன் தன்னை
7. ஞானமாக உன்வழி கண்டு உயர்காட்சி
ஞாலமதில் கண்டு தேறி மீழ்வரப்பா
அப்பனே அருளுகின்றேன் ஆறுமுகன் யான்
அரங்கனாய் இருந்து இந்த கலியுகத்தில்
8. காப்பான தர்மபாதை வழி நடத்தி
கலியுகத்தை மீட்டருள்வேன் ஐயமற
ஐயமற ஞானயுக மாற்றமெல்லாம்
அரங்கனைக்கொண்டே யான் நடத்திடுவேன்

9. மெய்ஞானம் வேண்டி உலகோர் அரங்கன் தேடி
முழுமைபட பிரணவக்குடில் சரணாகதி
சரணாகதி கொண்டுவிட கலியுகத்தில்
சடுதி இந்த மாற்றம் அற்புதமாக நடத்தி அருள்வேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–